بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 13/02/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியராகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் இறைவணக்கம் தொடர்பான ஈமானுக்கு ஒளியூட்டும், மனம் கவரும் குறிப்புகள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை எல்லோரையும்விட அதிகமாக பின்பற்றி நடந்த காட்சிகளை இக்காலத்தில் அன்னாரின் உண்மை ஊழியரான ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களிடம் நாம் காண்கிறோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறைவணக்கம் மற்றும் அது குறித்த அறிவுரைகள் கடந்த குத்பாவில் எடுத்துரைக்கப்பட்டன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றி செய்த இறைவணக்கம் தொடர்பான சம்பவங்களை இன்று எடுத்துரைப்பேன்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: ஹஸ்ரத் மிர்ஸா முஹம்மது தீன் (ரலி) அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில், "நான் எனது சிறுவயது முதலே ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களைப் பார்த்து வருகிறேன். அன்னாருடைய தந்தை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் உயிருடன் இருந்த காலத்தில்தான் நான் அன்னாரை முதன் முதலாக கண்டேன். அப்போது நான் முற்றிலும் சிறுவனாக இருந்தேன். அன்னாருடைய வழக்கம் என்னவென்றால், இஷா தொழுகைக்குப் பிறகு விரைவில் உறங்கிவிடுவார்கள்; பின்னர் இரவு ஒரு மணி அளவில் தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழுந்து விடுவார்கள். தஹஜ்ஜுத் முடித்த பின் திருக்குர்ஆன் திலாவத் செய்து கொண்டிருப்பார்கள்; சுப்ஹு பாங்கு சொன்னதும் பள்ளிவாயிலுக்குச் சென்று ஜமாஅத்தாகத் தொழுவார்கள். சில சமயம் அன்னார் இமாமத் செய்வார்கள்; சில சமயம் பள்ளிவாயிலின் இமாமாகிய மியா(ன்) ஜான் முஹம்மது அவர்கள் இமாமத் செய்வார்கள். அன்னார் பள்ளிவாயிலில் சுன்னத் தொழுகைகளைத் தொழுவதை நான் கண்டதில்லை" என்று எழுதியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "நான் ஒருபோதும் கடுமையான உடல் வருத்தங்களையோ, தற்கால சூஃபிகளைப் போல ஆன்மாவிற்குத் துன்பம் தரும் கடும் முயற்சிகளையோ மேற்கொண்டதில்லை. (சுன்னத்திற்கு மாற்றமாக) ஏகாந்தமாக ஓரிடத்தில் அமர்ந்து 'சில்லா' (நாற்பது நாள் தவம்)

செய்ததும் இல்லை. இறைவேதத்தால் ஆட்சேபிக்கப்படக்கூடிய, சுன்னத்திற்கு மாற்றமான துறவறச் செயல்கள் எதனையும் நான் செய்ததில்லை."

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது தந்தையார் மரணமடைவதற்குச் சற்று காலத்திருக்கு முன்பு தாம் மேற்கொண்ட ஓர் ஆன்மிகப் பயிற்சி குறித்து விவரித்துள்ளார்கள். அதில் ஒரு பெரியவரைத் தமது கனவில் கண்டதாகவும், வானுலக ஒளிகளை வரவேற்பதற்காக நபித்துவ குடும்பத்தின் வழிமுறைப்படி சில நோன்புகளை நோற்குமாறு அவர் கூறியதாகவும் குறிப்பிட்டார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "எனவே நான் சில காலம் நோன்பு நோற்பதை பொருத்தமாகக் கருதினேன். அதே சமயம் இதை மறைமுகமாகச் செய்வது சிறந்தது என்பதால், வீட்டிலிருந்து எனது உணவை ஆண்களுக்கான (வெளி) அறைக்கு வரவழைத்து அதனை சில அநாதைக் குழந்தைகளுக்குப் பகிர்ந்து கொடுத்து விடுவேன். அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் இந்த நோன்புகள் பற்றித் தெரியாது. இரண்டு மூன்று வாரங்களுக்குப் பிறகு, நான் ஒரு வேளை வயிறு நிரம்ப உண்பதால் எனக்கு எவ்விதச் சிரமமும் ஏற்படுவதில்லை என்பதை உணர்ந்தேன். எனவே உணவின் அளவை இன்னும் குறைக்க எண்ணினேன். அன்று முதல் உணவைக் குறைத்துக் கொண்டே வந்தேன். இறுதியாக, பகல் இரவு முழுவதற்கும் சேர்த்து ஒரே ஒரு ரொட்டி மட்டுமே எனக்கு உணவானது. பிறகு அதையும் குறைத்து, 24 மணி நேரத்திற்குச் சில ரொட்டி துண்டுகள் மட்டுமே எனது உணவாக இருந்தது. சுமார் எட்டு அல்லது ஒன்பது மாதங்கள் நான் இவ்வாறே செய்தேன். இரண்டு, மூன்று மாதக் குழந்தைகூடத் தாங்கிக்கொள்ள முடியாத இத்தகையக் குறைந்த உணவிலும், அல்லாஹ் என்னை எல்லாவிதமான நோய்களிலிருந்தும் இன்னல்களிலிருந்தும் பாதுகாத்தான்."

அந்நேரத்தில் அந்த நோன்புகளின் விளைவாக அன்னார் அற்புதங்கள் பலவற்றை அனுபவத்தில் உணர்ந்தார்கள். அந்த நோன்புகளின் விளைவாக பல நபிமார்களையும் இறை நேசர்களையும் சந்தித்தார்கள். **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "ஒருமுறை விழிப்பு நிலையிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும், ஹஸ்ரத் ஹஸன் (ரலி), ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) ஆகியோரையும் கண்டேன். இது கனவல்ல; விழிப்பு நிலையின் ஒரு வகையாகும்."

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டார்கள். அப்போது நினைவு திரும்பியதும் 'தொழுவதற்கான நேரம் வந்துவிட்டதா?' என்றுதான் முதலில் கேட்டார்கள். அதாவது, அந்த அளவிற்குத் தொழுகையின் மீது நேசம் கொண்டிருந்தார்கள். 1895 -ல் ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் (ரலி) அவர்கள் ரமலான் மாதத்தைக் காதியானில் கழிக்கும் வாய்ப்பு பெற்றபோது அந்த மாதம் முழுவதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்குப் பின்னால் தஹஜ்ஜுத் (தராவீஹ்) தொழுததாகக் கூறுகிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வித்ர் தொழுகையை இரவின் ஆரம்பத்திலேயே தொழுது விடுவார்கள்; தராவீஹை இரண்டு இரண்டு ரக்அத்களாக இரவின் கடைசிப் பகுதியில் தொழுவார்கள் என்றும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பை எடுத்துரைக்கிறார்கள்**: "ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஐவேளைத் தொழுகைகளைத் தவிர இரண்டு விதமான

நஃபில்களைத் தொழுது வந்தார்கள். ஒன்று இஷ்ராக் தொழுகை - இதை அவ்வப்போது தொழுவார்கள். இரண்டாவது தஹஜ்ஜுத் தொழுகை - எட்டு ரக்அத்கள் கொண்ட இத்தொழுகையைக் கடும் நோயுற்ற காலங்களைத் தவிர மற்ற எல்லா நாட்களிலும் தவறாமல் தொழுவார்கள். நோயுற்ற காலங்களிலும் படுக்கையில் படுத்தவாறே துஆ செய்வார்கள். இறுதி காலத்தில் பலவீனம் காரணமாக அமர்ந்து துஆ செய்தார்கள்."

**ஹஸ்ரத் மவ்லவி யஃகூப் அலீ சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்**: "ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நீதிமன்ற வழக்குகளுக்காகச் செல்லும்போதும் தமது தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்காகவே செல்வார்கள். அங்கேயும் அன்னாருடைய கவனம் எந்தத் தொழுகையும் விடுபட்டு விடக் கூடாது என்பதிலேயே இருக்கும்."

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் குரலில் மிகுந்த உருக்கமும் வேதனையும் இருக்கும். அன்னாருடைய திலாவத் அலை போன்ற ராகத்துடன் இருக்கும். அன்னாருக்குக் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நடைமுறை மீது நேசம் இருந்தது. அன்னாருடைய இறைவணக்கங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுதலை ஒருபோதும் தாண்டிச் சென்றதில்லை. தொழுகையைத் தவிர அன்னாருடைய (வழக்கமான) திக்ருகள் திருக்குர்ஆன் ஓதுதல், துரூத் ஷரீஃப் மற்றும் இஸ்திக்ஃபார் ஆக இருந்தது. திருக்குர்ஆனின் மீதோ அன்னாருக்கு அளவற்ற நேசம் இருந்தது. இரவு பகல் பாராமல் அமர்ந்திருக்கும்போதும், நடக்கும்போதும் திருக்குர்ஆன் ஓதுவார்கள்; ஓதும்போது தேம்பித் தேம்பி அழுவார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தொழுகைக்காக பள்ளிவாயிலுக்குச் செல்ல முடியாத நேரங்களில், வீட்டிலேயே ஜமாஅத்தாக தொழுகை நடத்துவார்கள். அத்தகைய நேரங்களில் பெரும்பாலும் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களையும் (தொழுகையில்) தம்முடன் சேர்த்துக் கொள்வார்கள்.

**ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ இர்பானி சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சிறுவயது குறித்துக் கூறுகிறார்கள்**: "ஹுஸூர் (அலை) அவர்கள் பின்னாளில் யாரை திருமணமும் செய்து கொண்டார்களோ அந்த சமவயது சிறுமியிடம் துஆ செய்யச் சொல்லும்போது, பேறிழந்தவளே! இறைவன் எனக்குத் தொழுகையை வழங்க வேண்டும் என்று எனக்காக துஆ செய் என்று கூறுவார்களாம்."

இந்த வாசகத்திலிருந்து மிகவும் சிறுவயதிலிருந்தே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உணர்வுகள் எவ்வளவு தூய்மையாக இருந்தன என்பது தெரிய வருகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "நான் சிறுவயது முதலே நோன்பு நோற்பதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். ஒருமுறை சிறுவயதில் நோன்பு நோற்ற போது உடல்நலம் குன்றியது; ஆனால் அதன் பிறகு நான் 29 நோன்புகளையும் முழுமையாக வைத்த போது அந்தப் பெருநாள் எனக்கு மகிழ்ச்சியான பெருநாளாக இருந்தது. நோன்பிற்கென்று தனித்துவமான அருள்கள் உள்ளன. ஒவ்வொரு பழத்திற்கும் எவ்வாறு தனித்தனி சுவை உண்டோ அவ்வாறே ஒவ்வொரு இறைவணக்கத்திற்கும் தனித்தனி இன்பம் உண்டு. அந்த இறைவணக்கங்களில் ஓர் ஆன்மிகம் உள்ளது; அதனை மனிதனால் எடுத்துரைக்க

இயலாது. இறைவணக்கத்தில் மனிதனின் ஆன்மா மிக மென்மையாகித் தண்ணீரைப் போல் ஓடி இறைவனுடன் கலக்க வேண்டும்."

**ஹஸ்ரத் பீர் ஸிராஜுல் ஹக் நுஃமானி சாஹிப் (ரலி) அவர்கள் மியா(ன்) ஜான் முஹம்மது மர்ஹூம் (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகையைக் குறித்து கூறுகிறார்கள்**: "ஹுஸூர் (அலை) அவர்களுக்கு மர்ஹூம் மீது எல்லையற்ற நேசம் இருந்தது. ஹுஸூர் (அலை) அவர்களே ஜனாஸா தொழுகையை நடத்தினார்கள். அந்தத் தொழுகை முடிய எவ்வளவு நேரம் ஆனது என்றால், பின்னால் நின்றவர்களின் கால்கள் வலிக்கத் தொடங்கின. நின்று நின்று எனது நிலைமையோ மிகவும் மோசமாகிவிட்டது. ஜனாஸா முடிந்ததும் ஒருவர், ஹுஸூர்! இன்று இவ்வளவு நேரம் தொழுகை நடைபெற்றதில் நாங்கள் களைப்படைந்து விட்டோம். உங்கள் நிலை என்ன ஆகியிருக்கும் என்றார். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள், களைப்படைவதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? நாம் அல்லாஹ்விடம் துஆ செய்துகொண்டிருந்தோம். அந்த மர்ஹூமுக்காக பாவமன்னிப்பு வேண்டிக் கொண்டிருந்தோம். (இறைவனிடம்) கேட்பவன் எப்போதாவது களைப்படைவானா? கேட்பதில் களைப்படைபவன் பின்தங்கி விடுகிறான். நாம் கேட்பவர்கள்; அவன் கொடுப்பவன். பிறகு களைப்பு எதற்கு? யாரிடமாவது சிறு உதவி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டாலே போதும், யாசிப்பவர் நகராமல் அங்கேயே நின்று விடுவார் என்று கூறினார்கள்."

அல்லாஹ் நமக்கும் இத்தகைய சிந்தனையுடன் தொழுகைகளை நிறைவேற்ற நல்வாய்ப்பு வழங்குவானாக. அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைப்படி தொழுகைகளை நிறைவேற்றுவோம் எனவும், அல்லாஹ்வின் பேரருள்களை நினைவுகூர்ந்து அவனைப் புகழ்ந்தவாறு தொழுகைகளை நிறைவேற்றுவோம் எனவும் இந்நிபந்தனையுடன் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ளோம். இந்த வாக்குறுதியை நிறைவேற்ற அல்லாஹ் நமக்குத் நல்வாய்ப்பு வழங்குவானாக.

*குத்பாவின் இறுதியில், ஹுஸூர் அவர்கள் இரு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து, அவர்களின் ஜனாஸா ஃகாயிப் தொழுகையை தொழ வைப்பதாக அறிவித்தார்கள். மேலும், மர்ஹூம்களின் பாவமன்னிப்பிற்காகவும், அந்தஸ்து உயர்வுக்காகவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)